FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| தரம் :- 12 (2019) | தமிழ் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

01. அ)

1) கன்றானது பால் அருந்திக் கொண்டிருக்கின்ற வேளையிலே வீட்டின் முற்றத்திலுள்ள தினைப்பயிரை பெண்யானை உண்ணுதற்கு இடமாகிய பெரிய மலைகளைக் கொண்ட நாட்டை உடையவனே, தான் வறுமையுற்ற காலத்திலே பிறரால் பெற்று மகிழ்ந்த உதவியை அரச கட்டிலாகிய சிறப்பைப் பெற்ற போது மறந்து விட்ட அரசன் போல நீ நாம் செய்த நன்றியை மறவாது அதனை நினைத்து தலைவியை விரைவாக வரைந்து கொள்வாயாயின் அவளுடைய வரைந்த மெல்லிய சிறப்பையுடைய ஆரவாரிக்கும் மயிலினது பீலியைப் போன்ற தழைத்த மெல்லிய கூந்தல் உனக்கே உரிமையுடையதாகும்.

(04 புள்ளிகள்)

2)

- தலைவனது செயலை யானையின் செயலுக்கு உவமித்து, குறிப்பின் மூலம் அவன் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துதல்.
- நன்றி மறந்தவரது செயற்பாட்டை எடுத்துக்கூறி தலைவனது தற்போதைய நிலையை எடுத்துக்காட்டல்.
- இவற்றின் மூலம் தலைவனது கடமையையும் பொறுப்பையும் எடுத்து விளக்குதல்.

agaram.lk

(03 புள்ளிகள்)

3) வரைவு கடாவுதல்
உள்ளுறை உவமம்
இறைச்சிப் பொருள்

(03 புள்ளிகள்)

ஆ)

1) பரதன் தன் சேனையோடு வருவதைக் கண்டு கோபம் கொண்டவனாகிய குகன் தன்னினத்தவராகிய வேடரை நோக்கிக் கூறுகின்றான்.

(03 புள்ளிகள்)

2) உவமையணி

1. உவமானம் - ஏழுகடல்
உவமேயம் - படை
பொதுத்தன்மை - அளவு

2. உவமானம் - ஆ முனையின் சிறு கூழ்
உவமேயம் - குகனது படையை எதிர்க்கும் சேனை
பொதுத்தன்மை - முற்றாக அழிந்து போதல்

(04 புள்ளிகள்)

3) பரதனை எதிர்த்தால் இராமன் தன்னைக் கோபிக்கக்கூடும் என்பதை எண்ணாமை எந்தப் பெருஞ்சேனை எதிர்த்தாலும் தனது அம்பால் அழித்து விடுவேன் எனக் கூறுதல்.

(03 புள்ளிகள்)

02. அ)

| | |
|---|---|
| 1) 3 | 6) 5 |
| 2) 3 | 7) 4 |
| 3) 2 | 8) 2 |
| 4) 4 | 9) 4 |
| 5) 3 | 10) 5 |

(10X1=10 புள்ளிகள்)

ஆ)

1) பெயர் அல்லது வினைச் சொற்களுடன் ஆக்கப்பெயர் விகுதிகள் இணைந்து வருவது ஆக்கப்பெயர் எனப்படும்.

உ + ம் :- முதல் + ஆனி - முதலாளி
தொழில் + ஆளி - தொழிலாளி
படி + ப்பு - படிப்பு
நடி + ப்பு - நடிப்பு

2) சொற்களினிடையே ஒரே மெய்யெழுத்து இணைந்து வருவது

உ + ம் :- பாட்டு - பா+(ட்+ட்)+உ
சொத்து- சொ+(த்+த்)+உ

3) நான், நாங்கள் முதலிய தன்மைப்பெயர்கள் நேரடியாக வேற்றுமை உருபுகளை ஏற்கா என், எங்கள் என மாற்றமடைந்து வேற்றுமை உருபுகளை ஏற்கும்

உ + ம் :- என்னை - எங்களை
என்னால் - எங்களால்
எனக்கு - எங்களுக்கு

agaram.lk

4) அ, இ, உ என்னும் மூன்று உயிர்களும் சொல்லின் புறத்தே நின்று சுட்டுப் பொருளில் வருமாயின் புறச்சுட்டு எனப்படும்.

உ + ம் :- (அ) + மனிதன் - அம்மனிதன்
(இ) + புத்தகம் - இப்புத்தகம்
(உ) + வீடு - உவ்வீடு

5) கடந்தன்ன

கட + த் ந் + த் அன் + அன்

கட - பகுதி
த் - சந்தி
ந் - விகாரம்
த் - இடைநிலை
அன் - சாரியை
அன் - விகுதி

(5X2=10 புள்ளிகள்)

03. கட்டுரை – புள்ளித்திட்டம்

| | | |
|---|---|---|
| பொருட் பொருத்தம் | - | 08 |
| மொழிச் செம்மை | - | 06 |
| பந்தி, குறியீடு | - | 04 |
| முழுமை | - | 02 |

## பகுதி – II 'ஆ'

04. அ) செருக்கு, சினம், காமம், கொடாமை, மாட்சியில்லாமை, அளவு கடந்த மகிழ்ச்சி என்பன குற்றங்களாகும். (விளக்கி எழுதப்பட வேண்டும்)

(06 புள்ளிகள்)

ஆ) பழிக்கு நாணாமை, குற்றம் அழிவைத் தரும். குற்றத்தால் வாழ்வே அழியும் என்பன விளக்கப்படல் வேண்டும்.

(07 புள்ளிகள்)

இ) அரசன் குற்றங்களை அறிதல், ஈயாத்தன்மை சேர்த்து வைத்த செல்வத்தை அழிக்கும் தன்செயலை வியத்தல், தான் விரும்பிய பொருளை அனுபவிக்கும் நிலை என்பன விளக்கப்படல் வேண்டும்.

(07 புள்ளிகள்)

05. அ)

- ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பம்
- முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த முத்தன் முடிவிலாத முதல்.
- திரை பொரா மன்னும் அமுதத்தெண்கடல்
- உணர்வுக்கும் தெரிவரும்பொருள், எல்லா உயிர்கட்கும் உயிர்
- குறைவிலா நிறைவு, கோதில அமுது, ஈறிலாக் கொழுஞ் சுடர்க்குன்று
- கரந்ததோர் உரு
- பரந்ததோர் படரொளிப்பரப்பு
- சோதியாய்த் தோன்றும் உருவம், அருவம் சொல்லுதற்கரிய ஆதி, நடு, அந்தம், பிறவி அறுக்கும் பேரின்பக்கடல், தீதிலா நன்மை,

(05 புள்ளிகள்)

ஆ)

- மாறி நன்றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைந்தமுதே ஊறி நின் றென்னுள் எழுபரஞ்சோத
- அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை ஆனந்த மாய்க் கசிந்துருக.
- என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்.
- ஆவியோடாக்கை …………… கடிந்த மெய்ச்சுடரே
- மறையுமாய் ………. மன்னிய மன்னே
- இரந்துடுக என் ……….. எழுகின்ற சோதியோ
- இன்னெனக் கருளி ………… ஞாயிறே
- சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே

(05 புள்ளிகள்)

இ) பிறப்பறுக்கும் மருந்து
மனத்திடை நிலைபெற்றிருத்தல்
சிந்தையிலே கோயில் கொள்ளல்
உடலிடங் கொள்ளல்

(05 புள்ளிகள்)

ஈ) புகுந்து நின்று உருக்கல்
உடலிடங் கொள்ளல்
கண்ணுறக் கண்டு களித்தல்

(05 புள்ளிகள்)

06. அ)

- முன்னர் செய்த நல்வினையோடு சிறிது தீமையும் செய்தமையால் காதலியோடு பெருந்துன்பம் அடைந்தமை.
- அறவழி வாழும் துறவியர் அறிவுரைப்பணி.
- வினைப்பயன் கண்டு கற்றவர் வருந்த மாட்டார்.
- பெண்களோடு சேர்ந்து வாழ்வோருக்குரிய இன்பங்கள்
- இல்லத்து வாழ்வியலில் அடையும் துன்பங்கள் இது பண்டு தொட்டு வரும் அவல நிலை
- இராமன் வாழ்க்கை நிலை
- நளன் வாழ்க்கை நிலை
- நீ மனைவியைப் பிரியாமல் இருப்பதால் வருந்தாதே எனல்

(10 புள்ளிகள்)

ஆ)

- விரையார் பொழில் வேங்கடம்
- கடியார் பொழில் அரங்கம்
- மத்திபாய் வடவேங்கட மாமலை
- மதுரமா வண்டு பாட மாமயிலாடும் அரங்கம்
- வண்டு வாழ் பொழில் சூழ் அரங்க நகர்

(10 புள்ளிகள்)

இ) அகன்ற நெய்தல் நில நீர்ப்பரப்பு பெருந்துறை விரிநீர் எனச் சிறப்பிக்கப்படல்.

(10 புள்ளிகள்)

07. அ)

- எட்டுத்தொகை நூல்கள்

| **அகம்** | **புறம்** |
|---|---|
| அகநானூறு | புறநானூறு |
| நற்றிணை | பதிற்றுப்பத்து |
| ஐங்குறுநூறு | |
| குறுந்தொகை | |
| கலித்தொகை | |

அகமும் புறமும்
பரிபாடல்

agaram.lk

- பத்துப்பாட்டு நூல்கள்

| **அகம்** | **புறம்** |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| முல்லைப்பாட்டு | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |
| | பொருநராற்றுப்படை |
| | பெரும்பாணாற்றுப்படை |
| | மதுரைக்காஞ்சி |

அகமா புறமா என்ற சர்ச்சைக்குரிய நூல்கள்

நெடுநல்வாடை

பட்டினப்பாலை

*(07 புள்ளிகள்)*

ஆ)

- அகம், புறம் என்னும் பொருள் மரபு
- இயற்கையோடு ஒட்டி அமைந்தவை
- முதல் கரு உரிப்பயன்பாடு
- அன்பினைந்திணை, கைக்கிளை, பெருந்திணை
- உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள்
- ஒரு விடயம் ஒரு செய்யுளில் குறிப்பிடப்படுதல்
- புலநெறி வழக்கு

இ)

- கைக்கிளை என்பது ஒருதலைக் காதல்.
  1) பருவமடையாத பேதை மீது காதல் கொண்டு அவளைப் பற்றிப் பலவாறு சொல்லி இன்புறுதல்.
  2) ஏறு தழுவுதல் மூலம் நிகழும் திருமணங்கள்
  3) தலைவனும் தலைவியும் காதல் கொள்ளமுன் தலைவனிடத்தே தோன்றும் காட்சி, செயல், தெளிவு, தேறல்.
  - பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்
  - ஒருவன் ஒருத்தி மீது காதல் கொண்டு அவளை அடைய முடியாத பட்சத்தில் மடலேறுதல், வரைபாய்தல் முதலானவற்றைக் கையாளுதல்.

*(06 புள்ளிகள்)*

08. அ)

- அறக்கருத்துக்களைப் பேசுபவை
- ஆசாரம், நீதி, ஒழுக்கம், நல்லாட்சி முறைகள், வாழ்வியற் கடப்பாடுகள் போன்றவற்றை எடுத்துக் கூறுபவை.
- தொடர்நிலைச் செய்யுள்களாக அமைந்தமை.
- சமண, பௌத்த மதங்களின் பிரசார ஊடகம்.
- நேரடியாகவும் மறைமுகமாகவும், பழமொழிகளூடாகவும், கதைகளூடாகவும் அறக்கருத்துக்களைப் போதித்தல்

*(07 புள்ளிகள்)*

agaram.lk

ஆ)

- அறமே பிரதான பாடுபொருள்
- சமயச் சார்பு
- மணிப்பிரவாள நடை
- சமண, பௌத்த மதக் கருத்துக்கள்
- வெண்பா வடிவம்
- தொடர் நிலைச் செய்யுள்.

(07 புள்ளிகள்)

இ)

- பக்தி என்னும் புதிய பொருள் மரபு
- விருத்தப்பா வடிவம்
- பதிக வடிவம்
- இறைவனுக்கு வடிவம் கொடுத்துப் பாடியமை
- அந்தாதி வடிவம்
  என்பவற்றை அறிமுகம் செய்தமை.

(06 புள்ளிகள்)

agaram.lk